ஸ்ரீஜிநாய நம:

# மேருமந்திர புராணம்

மூலமும் உரையும்

## 12. ஸ்ரீ விஹாரச் சருக்கம்

1011. காதியைக் கடிந்து வேந்தன், கைவலச் செல்வனானான்
வேதியன் அமைச்சன், விஞ்சை வேந்தனாய் வியந்து போனான்
போதணி குழலினாளும், புதல்வனும் தேவரானார்
யாதினி இவர்கள் செய்கை என்றிடில், இயம்ப லுற்றேன்.

சிம்மசேன அரசன் பல பிறவிகளுக்குப் பின் காதிஅகாதி வினைகளைக் கெடுத்து வீடுபேறடைந்தான். ஸ்ரீபூதியாக இருந்த வித்துத்தந்தனும் வியப்பெய்தியவனாய் நல்லறிவு பெற்று தனது இடம் சேர்ந்தான். மலர்ச்சூடிய கூந்தலையுடைய ராமதத்தையும், அவளது குமாரனாகிய பூரணச்சந்திரனும் தேவர்களானார்கள். இனி இவர்தம் வரலாற்றினைக் கூறுகின்றேன்.

1012. வேதிகை வேதண்டத்தின் வில்லுநாண் வீக்கிற்றே போல்
ஓதநீர் உடுத்த மண்மேல்; உத்தர மதுரை என்னும்
போதொடு தளிர்கள் மிண்டிப் பொறிவண்டும் தேனும் பாடத்
தாதொடு மதுக்கள் வீயும் தண்பணைச் சோலைதுண்டே.

இவ்வுலகில் லவண சமுத்திரத்தின் வேதிகை வில்லாகவும், விஜயார்த்த பர்வதம் நாணாகவும் அமைந்தது போன்ற இப்பரத கண்டத்தில் துளிரும், மலரும் நிறைந்து வண்டுகள் இசைக்கும் தேன் சொரியும், குளிர் மரங்கள் நிறைந்த சோலைகளால் சூழப்பட்ட, வடமதுரை என்னும் நகரம் ஒன்று உண்டு.

1013. பகற்கு இடைகொடாத பைம்பொன் மாளிகைப் பாவை நல்லார்
அகில்புகை அகத்து நின்றார், அணிவரை அதனைச் சூழ்ந்த
முகில்கொடி மின்னுப்போன்று தோன்றுவார், குழாம் முழங்கத்
துகில்கொடி யோடும்மஞ்சை தொடங்கிய நடங்கள் ஓவா.

அந்நகரில் எண்ணற்ற கொடிகள் நுடங்கும்போது உண்டாகும் ஒலிகேட்டு அதை மேகங்கள் என நினைத்த மயில் கூட்டங்கள் ஆடிக்கொண்டிருக்கும், சூரிய ஒளி விழாவண்ணம் ஓங்கி உயர்ந்த பொன் மாளிகைகளிலிருந்து கிளம்பும் அகில் புகைக்கிடையே நிற்கும் சித்திரம்போன்ற அழகிய பெண்களின் தோற்றம், மலையைச் சூழ்ந்துள்ள மேகத்தில் தோன்றும் மின்னல்களைப் போல் விளங்கும்.

1014. காமனே கவ்வை செய்வான், கரிகளே நிகளம் பெய்வ
தாமமே மெலியும், வண்ணம் சங்கரம் சிற்பியர்க்கே
சேமமார் சிறைபுனற்கே, தீத்தொழில் மறையவர்க்கே
வாம மேகலையினாரே வசியம் அந்நகரத்துள்ளே.

அந்நகரத்தில் வருத்தம் செய்யக்கூடியவன் மன்மதன் ஒருவனே. யானைகளின் கால்களே விலங்கினை அணியும். மலர்மாலைகளே வாடுபவன. வண்ண ஓவியங்களுக்காக சிற்பியர்களால் வண்ணங்களே கலக்கப்படும். புனல் நீரைத்தடுக்கும் அணைகளுக்கே காவல், தீயினால் இயற்றும் தொழில் அந்தணர்களுக்கே பிறரை வசியம் செய்பவர் அழகிய மேகலைகளை அணிந்த மகளிரே!

1015. சினம்தலை நின்ற வேந்தர் திண்புயம் சிதைத்த வீரத்து
அனந்தரீரியன் என்பானாம் அந்நகர்க்கு இறைவன் நல்லார்
மனந்தொறும் இருந்த காமன் வண்மையான் மாரிஒப்பான்
நனந்தலை உலகில் உள்ள நவையெலாம் தீர நின்றான்.

அந்நகரின் வேந்தன், சினம்மிக்க தோள்வலிமை பெற்ற பகை வேந்தர்தம் பலத்தைத் தனது வீரத்தினால் தொலைத்தவன் அதனால் அவனுக்கு அனந்தவீரியன் என்னும் பெயர் அமைந்தது. பெண்கள் பெரிதும் விரும்பும் மன்மதனுக்கு நிகரானவன். வாரி வழங்குவதில் மேகத்தைப் போன்றவன். மிகப் பரந்த இவ்வுலகத்தின் வருத்தம் நீங்குமாறு செங்கோல் செலுத்தி வந்தான்.

1016. பாரிசாதத்தைச் சார்ந்த, பவழத்தின் கொழுந்தை ஒப்பாள்
மேருமாலினி என்பாள், அவ்வேந்தன் மாதேவி மிக்காள்
வாரிவாய் அமிர்தம் அன்னாள், அமிர்தமாமதி என்பாள் ஆம்
கார் ஒன்றோடு இரண்டுமின்போல் காவலன் கழுமி நின்றார்.

அவனது பட்டத்தரசியானவள் கற்பகமரத்தைச் சார்ந்த பவழக்கொடி போன்றவள், மேருமாலினி என்னும் பெயருடையவள். மிக்க நற்குணமுடையவள், அடுத்தவள் கடலமுதம் போன்றவள் அமிர்தமதி என்னும் பெயரினள் – மேகத்தில் இரண்டு மின்னல் கொடிகள் போல், இவர்கள் இருவரும் வேந்தனைப் பொருந்தி வாழ்ந்தனர்.

1017. மகர ஏறு இரண்டு தோளால்; வாரியுள் திரிவதே போல்
சிகரமால் யானையான், அத்தேவிமார் புயங்களாக
நிகரிலா இன்ப வெள்ளக்கடலிடை, நீந்தும் நாளுள்
புகரிலார் வானின் வந்து, இவ்விருவர்க்கும் புதல்வரானார்.

ஆண் மகரமீன் ஒன்று இரண்டு செதிள்களால் கடலில் மகிழ்ச்சியுடன் நீந்துவதுபோல், மிகப்பெரிய யானைகளையுடைய அரசன் தனதுஇருமனைவியரும் இரண்டு தோள்களாக, நிகரற்ற இல்லறக்கடலிலே, இன்பமாக நீந்துகின்றபோது – குற்றமற்றவர்களான, ஆதித்யாபவனும், பவணேந்திரனும் தேவருலகினை நீத்து வந்து, இரண்டு தேவியர்க்கும் பிள்ளைகளாகத் தோன்றினர்.

1018. மாலினிதன்கண் ஆதித்தாபன், மாமேருவானான்
பாலன மொழி மதிக்கண், பவணன் மந்தரனும் ஆக
வேலையைச் செறிந்த ஆழிபோல் களிசிறந்து வேந்தன்
ஞாலத்துக்கு இடரைத் தீர நடக்கும் கற்பகத்தை ஒத்தான்.

மேருமாலினி வயிற்றிலே ஆதித்யாபன் மேரு என்னும் பெயருடைய மகனாயினான். பால்போன்ற இனிய மொழிபேசும் அமிர்தமதிக்கு பவணதேவன் மந்தரன் என்னும் புத்திரனாயினான். இதனால் கரைகளை மோதும் கடல் அலைபோல், அரசன் மகிழ்ச்சியால் பொங்கி உலகிலுள்ளவர் வறுமை தீருமாறு கற்பகத்தைப் போல் வாரி வழங்கினன்.

1019. மங்கையர் கொங்கை என்னும் குவட்டினின்று இழிந்து நல்ல
சிங்கபோதகங்கள் போலத் தவிசிடைத் தவழ்ந்துசென்று
பங்கயத் தலங்கள் போலும், பவழச்சீறடியைப் பாரா
மங்கை தன் சென்னி சூட்டி நடந்திட்டார் மாலையாக

அந்தப் பிள்ளைகள் இருவரும் தாய்மார்களது மார்பகங்களாகிய மலை முகடுகளிலிருந்து இறங்கி, அரிய சிங்கக் குட்டிகள்போல் பூந்தவிசுகளில் நடைபயின்று தாமரைமலர் போல் மென்மையான, பவழம்போல் சிவந்த பாதங்களைப் பார்மகளின் சென்னியில் பொருந்தி முறையாக நடை பயின்றனர்.

1020. நாவிளம் கொம்பின் நல்ல கலையல்குல் நலத்தை உண்டு
மாவிளம் களிறு தேர் வாள் வில்தொழில் வல்லராகித்
தேவிளம் குமரர் போலத் தேசொடு திளைக்கும் மேனிக்
கோவிளம் குமரர் காமன் குனிசிலைக்கு இலக்க மானார்.

அடுத்த அந்த அரசிளங் குமரர்கள், நாவிலே உறையும் இளங்கொடி போன்ற நாமகளின் நலமாகிய கலைகளைக் கற்று யானை, குதிரை, தேர் இவை தொடர்பான போர்த்தொழில்களைப் பயின்று வில்வித்தையில் தேர்ந்து தேவகுமாரர்களைப் போல், பொலிவுடன் விளங்கும் மேனியராய், மன்மதன் இலக்கிற்கான இனிய பருவமாகிய வாலிபப் பருவத்தை அடைந்தனர்.

1021. கடைந்தநல் அலகு அம்பென்னக் கறுத்திடை வெளுத்துச் சூழ
மடங்கல் போல் மொய்ம்பின், மைந்தர் மனத்தினைக் கணத்து அழிக்கும்
தடங்கண் அம்பாக நல்லார் தனுவில் நாணேற்றித் தான் அங்கு
அடங்கி நின்று அனங்கன் மைந்தர் உள்ளத்தே அழிக்கலுற்றான்

கடைந்தெடுத்த கூரிய அம்புபோன்று, இடை கருத்து சூழ வெளுத்திருப்பதும், சிங்கம் போன்ற வீரம்மிக்க இளைஞர்களின் மனதை ஒருகணத்தில் மயக்கக் கூடியதுமான அழகிய பெண்களின் கண்களாகிய அம்பினை, அவர்தம் புருவ வில்லிலே பூட்டி, காமன், அந்த இளைஞர்களின் உள்ளத்தைக் கெடுத்துத் தன் வயப்படுத்தலுற்றான்.

1022. கைச்சிலை குழைய வாங்கிக் கணை மழை பொழிந்து காமத்து
இச்சையை மைந்தர் உள்ளத்து எழுத்தமாட்டாது அனங்கன்
வச்சிரம் பஞ்சில் துய்யா வடுப்படுமேனும் காமத்து
இச்சையை, மைந்தர் உள்ளத்து எழுத்தொணாது என்று போனான்.

காமனானவன் தனது வில்லினை நன்கு வளைத்து மலர்க் கணைகளைப் பொழிந்தும் அவர்கள் உள்ளத்தில் காதலை வளர்க்முடியாத தோற்றான் - பஞ்சுப்பொதியினை வச்சிராயுதம் துண்டித்தாலும் துண்டிக்கும், இவர்தம் உள்ளத்தில் காம உணர்வை எழுப்புதல் இயலாதென்று பின்னடைந்தான். (அதாவது இருவரும் உறுதியுடன் பெண்ணாசை தோன்றாது இருந்தனர்.)

1023. காயத்தின் உவர்ப்பும் காம போகத்தின் வெறுப்பும் மாற்றாம்
மாயத்தின் வடிவும் எல்லாம் நினைப்பிலா மனத்தினார்கள்
நோய்ஒத்த, நுகர்ச்சி செல்வம் நுரைஒத்த, இளமை தேசு
காயத்து வில்லைஒத்த, காமனுக்கு இடம் அங்குண்டோ.

உடலினுடைய வெறுக்கத்தக்க இயல்பினையும், சிற்றின்பம் அளிக்கும் காமத்தின்பால் வெறுப்பும், இல்லறத்தின் நிலையற்ற தன்மையையும் நன்குணர்ந்து அதனால் வைராக்கியமடைந்த மைந்தர்கள், ஐம்பொறி இன்பங்கள் கொடிய வியாதிக்குச் சமமானது; செல்வத்தின் நிலை நீரில் திரளும் நுரை போன்றது; இளமையும் உடல் அழகும் வானத்து வில்லைப் போன்றவை, இத்தகு சிந்தனைகளையுடைய அவர்தம் உள்ளத்தில் மன்மதனுக்கு இடமுண்டோ?

1024. அனித்தம், அரணின்மை, உறவின்மை, பிறிதின்மை
உனற்கரிய மாற்று, உலகம், ஊற்றுதரல், உவர்ப்பு
நினைப்பில்வரும் செறிப்பு, உதிர்ச்சி, போதி பெறற்கு அருமை
மனத்தின்வரல் நினைத்து மனையறத்து ஒழுகும் வழிநாள்

உடல் முதலிய அனைத்தும் நிலையற்றவை. உற்றார் உறவினர் யாரும் பாதுகாப்பாகமாட்டார்கள், எனக்கு நானே துணை பிறர் அல்லர், எண்ணற்கரிய சாரமற்ற சம்சாரத் தன்மையையும், இவ்வுலக இயல்பினையும், வினைகள் உயிரிடத்து வரும் ஊற்றினையும், உடலின் அருவருக்கும் தன்மையையும், எண்ணங்களால் வரும் வினைகளைத் தடுத்தலையும், எண்ணங்களால் வரும் வினைகளைத் தடுத்தலையும், வினைகளை உதிர்க்கும் தன்மையையும், உண்மையான நற்காட்சி முதலியவற்றைப் பெறற்கருமையையும் ஆகிய இப்பன்னிரண்டினைக் குறித்து இடையறாது சிந்தித்து இல்லறத்தே அவர்கள் வாழும் காலத்தே.

1025. அமலநல ஆடிஅகத்து ஆனநிழல்போல
துமிலமிடை மூவுலகும் தோன்றும் அறிவுடைய
விமலன் எனும் அறிவன் மலர்மழை பொழிய விண்ணோர்
கமலம் மிசை உலவிஒரு காவகம் அடைந்தான்

தூய்மையான கண்ணாடியில் தோன்றும் பிம்பம் போல், பரமாணுக்களால் அமைந்த இம்மூவுலகையும், தனது வாலறிவினால் உணரும் விமல தீர்த்தங்கரராகிய அருகப் பெருமான் விண்ணவர் மலர்மாரி பொழிய அவர்களால் அமைக்கப்பட்ட தாமரைமலர்கள் மேல் (நான்கு அங்குல உயரத்தில்) ஸ்ரீ விஹாரமாகி உத்தர மதுரையில் ஓர் வனத்தில் எழுந்தருளினார்.

1026. அனகன் வினை அகல, எழுந்தருளும் எனுமளவில்
கனக நவமணிமயம் ஓர் கமல நறு மலர்ஓர்
ஓசனை அகலம் உடைய அதன் இதழ்கள் தொறும் மடவார்
மனமகிழ நடநவில வானவர் அமைத்தார்

வினைகளைக் கெடுத்த விமல தீர்த்தங்கரன் பவ்வியர்களின் பாபவினைகள் அகலுமாறு எழுந்தருளும் காலத்தில் அமரர்கள், பொன்னாலும் ஒன்பது வகை மணிகளாலும் அமைந்த நறுமணம் கமழும் ஒரு யோசனை அளவு விரிந்துள்ள தாமரை மலரின் இதழ்கள் தோறும், தேவமாதர்கள், கண்டோர் மனம் மகிழ ஆடல் புரிந்து விளங்குமாறு அமைத்தனர்.

1027. வாசமலர் நான்கின் அவன்மேவி இறை வானோர்
ஓசனை இரண்டகன்ற மண்டபம் ஒன்று அமைத்தார்
ஈசன் எழுந்தருளும் என எழின் மணிப்பொன் முத்தின்
ஓசனைகள் மூன்றகன்ற வீதி உடன் அமைத்தார்.

மூவுலக நாதனாகிய விமல தீர்த்தங்கரன் மணம் மிக்க தாமரை மலரின்மேல் நான்கு அங்குல உயரத்தில் விஹாரம் செய்வாரென்று தேவர்கள் பொன்னாலும், மணிகளாலும் எழில் பெற இரண்டு யோசனை அகலமுடைய ஒப்பற்ற மண்டபம் ஒன்றைச் சமைத்தனர்; அத்துடன் மூன்று யோசனை அகலத்தில் முத்துக்கள் பரப்பப்பட்ட வீதியையும் அமைத்தனர்.

1028. மாருதியும் வாசமயமாகி, மந்தம் வீசிப்
பாரின்மலி நுண்துகள், பரிந்திட முயன்றான்
காரின்மிசை வந்து, வருணன் கமல மாதி
வேரிமலர் கமழு நறு, நீர்த்துவலை விட்டான்

அப்போது வாயுகுமாரன், நறுமணமுடைய இளந்தென்றலை வீசி பூமியில்படிந்துள்ள நுண்ணிய தூளிகளை அகற்றினான்; வருணனும் மேகத்தினாலே தாமரை மலர் முதலாகிய நறுமண மலர்களின் வாசம் கமழும் நீர்த்துளிகளைத் தூவி குளிரச் செய்தான்.

1029. இந்திரனும் எண்மை உலகாந்தியரும், இறைவன்
வந்து எழுந்தருளும், பொழுதென்று எதிர்வணங்க
இந்திரர்தம் கோனும், எழுந்தான் இருநிலத்துள்
அந்தரங்கள் தீர்ந்த, அறிவற்கு இயல்புஇதாமே.

தேவேந்திரனும், எண்வகை லௌகாந்திக தேவர்களும், இறைவன் எழுந்தருளும் காலம் இதுவென முன்நின்று வணங்க, பகவான் எழுந்தருளினான். உலகில் மோகம் அகன்றது. இதுபோன்ற நியதியான நிகழ்ச்சிகள் பகவானுக்கு இயல்பாக அமைவதாகும்.

1030. இடிமுரசம், திமிலை, கண்டை, காளம், எழில் சங்கம்
துடி, முழவம், மொந்தை, துணவம், தண்ணுமை, செகண்டை
கடல்முகிலின் ஒலிகரந்த திசைகள் விம்ம ஒலித்த
தடமலரின் மிசை இறைவன் தான்ஒதுங்கும் பொழுதே.

இறைவன் ஸ்ரீவிஹாரம் செல்லுங்கால் முழங்கும் முரசுகளும், பம்பை என்னும் மேளமும் பெரிய மணிகளும், சின்னங்களும், அழகிய சங்குகளும், உடுக்கை, மத்தளம், கட்பறை, துணவம் முதலிய கருவிகளும் தண்ணுமையும், சேமங்கலமும் கடல் மேகம் இவற்றின் ஒலி அழுந்துமாறு முழங்கின.

1031. இன்னரம்பின் யாழ், குழல்கள், வீணைமுதல் ஏந்திக்
கின்னரியர் கிளைநரம்பின் ஓதினார்கள் கீதம்
பொன்வயிரம் மணியமிர்தம் ஈன்று மலர் ஏந்திப்
பன்னரிய வகையின் நிலமடந்தை எதிர் பணிந்தாள்

கின்னர தேவர்கள் யாழ், குழல், வீணை முதலிய இசைக் கருவிகளினாலும், மிடறினாலும் கீதம் இசைத்தனர், பூமி தேவியானவள் பொன், வயிரம் முதலிய மணிகள், நந்நீர் முதலியவற்றை ஈந்து, நறுமண மலர்களை ஏந்தி இறைவனைப் பணிந்தாள்.

1032. சுந்தரியர் வந்தரியர் துறக்கத்து இளம்பிடியர்
அந்தரையின் அந்தரத்தின் வானின் நடம் பயின்றார்
மந்தர நன் மலர்மழைகள் வண்டினங்கள் சூழ
இந்திரர் கோன் எழுந்தருளும் வீதி எங்கும் பொழிந்தார்

சோதிர், வியந்தர, இளமை மிக்கப் பெண் யானைகளைப் போன்ற கல்பவாசி தேவமாதர்கள் அந்தரத்தே அழகாக அமைந்த அரங்கத்தில் நடனம் ஆடினர். இறைவன் எழுந்தருளும் இடமெங்கும், இந்திரர்கள் விண்ணுலகத்தின் கற்பக மலர்களை மழைபோல் சொரிந்தனர்.

1033. வாமனர்கள், மண்ணின், மறிந்து, எழுந்து நடம் புரிந்தார்
காமம் பிலவகவரசர், கரணம் சுழன்று எழந்தார்
கேமங்கரம் நாமங்கள் ஓர் ஆயிரத்தோர் எட்டும்
தாமங்கலம், பாடவர்களாம், இந்திரர் படிந்தார்.

அழகார்ந்த தேவர்கள் இச் சமவ சரண பூமியிலே இருந்து விண் எழுந்து நடம் புரிந்தார். பவண தேவர்கள் அழகாகத் தலைகீழாகச் சுழன்றாடினர். கல்ப உலக இந்திரர்கள் நன்மைகள் தரக்கூடியதான இறைவனது ஆயிரத்தெட்டு திருநாமங்களைத் தீவினை ஒழியவும் நல்வினை ஓங்கவும் பாடுதல் பொருந்தினர்.

1034. செங்கமலம் ஒன்றிரண்டு பங்கயம் மலர்ந்தென
அங்கமலத்து அறிவன்திரு அடியிணை வைத்தளவில்
திங்களன குடை மும்மையும் மண்டலமும் செறிந்த
பொங்கிய வெண் சாமரைகள் பூமழை பொழிந்தார்.

ஒரு செந்தாமரையின்மேல் இரண்டு செந்தாமரைகள் மலர்ந்ததுபோல் அமரர்களால் அமைக்கப்பட்ட மலர்மீது அறிவனாகிய தீர்த்தங்கர பரமதேவனின், அழகிய அடிகளை வைத்த காலத்தில் முழுமதிபோல் ஒளிபொருந்திய வெண்ணிற முக்குடைகளும், ஒளிவட்டமும், யட்சர்கள் அசைக்கும் வெண்கவரிகளும் ஒருங்கே சேர்ந்தன, அமரர்கள் மலர் மாரி பொழிந்தனர்.

1035. மாதவர்கள் மலரடி பணிந்து, பின்எழுந்தார்
சோதமனோடு எண்மை உலகாந்தர் தொழுதேத்தி
நாதன்எதிர் வைத்த முகத்தராகி, முன்னடந்தார்
காதிகெட வந்ததிருவோடு, சசி சென்றாள்.

மாமுனிவர்கள், மலர்ப் பாதங்களைப் பணிந்து எழுந்தனர், சௌதர்மேந்திரனுடன் எட்டுவகை லௌகாந்திக தேவர்களும் வணங்கித் துதித்து முகங்கொண்டு பின்னே நடந்தனர். காதி கர்மம் கெட்டதால் அடைந்த புண்ணியமாகிய இலக்குமியுடன் சசி மாதேவியும் சேர்ந்தாள்.

1036. பூரகலசம் முதல் எண்மங்கலங்கள் ஏந்தி
வேரிமலர் மடந்தையோடு, மேவினர் எழுந்தார்
காரின் மணி கனகம் பொழியாக் கமலம் சங்கின்
பேருடைய, நிதிக்கு அரசர், பின்னை முன் எழுந்தார்.

பூர்ணகும்பம் முதலிய எண்வகை மங்கலங்களை ஏந்தி, மணம் மிக்க தாமரை மலர்மீதுள்ள இலக்குமியுடன் தேவ மாதர் சிலரும் வந்தனர். மேகம் மழை பொழிவது போல் மணிகளையும் பொன்னையும் சொரிந்து பத்மம், சங்கம் என்னும் நிதிகளின் அதிதேவதைகளான தேவர்களும் முன்னும் பின்னுமாக வந்தனர்.

1037. பன்னகர்கள், பன்மணிகள், தீவிகைகளாக
முன்னம் இறை பாதம் பணிந்து, ஏகினார்கள் முறையால்
வன்னிமுடி வானவர்கள் சென்னிமிசை வைத்த
பன்னரிய தூபகடம் ஏந்திப் பணிந்து எழுந்தார்

பவண தேவர்கள் பல வண்ண இரத்தினங்களை ஒளி விளக்குகளாக ஏந்தி, இறைவனது அடிகளைப் பணிந்து முன்னே முறையாகச் சென்றனர்; அக்கினி குமாரர்கள், நறுமண கலசங்களைத் தலைமிசை சுமந்து, வணங்கி எழுந்து சென்றனர்.

1038. இரவி, சசி, எண்ணரிய தொக்கனைய இறைவன்
திருவுருவின் ஒளியழகு கண்டு, சிறந்தேத்திப்
பருதிமதி பான்மையுடை மரந்தர் முகம் என்னும்
அரவிந்தமும் குமுதங்களும் மலர உடன் எழுந்தார்

எண்ணற்ற சூரிய சந்திரர்கள் இணைந்து பிரகாசிப்பது போன்ற, இறைவனது ஒளிமயமான ஒப்பற்ற உடல் அழகினைக் கண்டு துதித்து, சிறப்புற்ற பான்மைமிக்க மக்களின் முகங்களாகிய தாமரைப் பூக்களும் அல்லி மலர்களும், பகவானது, கதிரவன் தண்மதியின் தன்மை பொருந்திய ஒளியால் மலர்ந்து எழுந்தனர்.

1039. குடையினொடு கொடி பருதி மின்னின் மிசைகுலவ
வடிவுடைய வைசயந்தை, வான்கொடி முன்னேக
இடியின் ஒலிஅவிய, எழில் நாந்தி முன் இயம்பப்
படருவினை எறியும், அருள் ஆழியும் முன்னேக.

வெண்குடையும், கொடிகளும் கதிரவன் போலவும் – மின்னலைப் போலவும் ஒளிரவும், வைஜயந்தை என்னும் அழகிய பெரிய கொடியானது முன்னே செல்லவும். கார் முழக்கம் அடங்குமாறு மங்கலப் பாடல்கள் ஒலிக்க, ஆன்மாவில் படரும் வினைகளை ஒழித்தற்குரிய அருள் மிக்க அறஆழி முன்னே செல்லவும்.

1040. தேசுதிசை சிறந்ததிசை உடைய மடவார்கள்
வாசமலர் மழைபொழிந்து மலரடி பணிந்தார்
காசினியில் ஈதி முதலானவை கரந்த
ஈசன் எழில் வாசமலர் ஏறிய கணத்தே

மூவுலகநாதன், ஒளிரும் மணம்மிக்க, தெய்வத் தாமரையின்மேல் ஆரோகணித்த அக்கணமே, திசைகளெல்லாம் ஒளிர்ந்தன. திசை தேவதைகள் மணமலர்களைப் பொழிந்து, இறைவன் மலரடிகளைப் பணிந்தனர். உலகில் தோன்றும் பல்வேறு தொல்லைகள் எல்லாம் பறந்தன.

1041. மூகர் மொழிந்தார், விடையின் முடவர்கள் நடந்தார்
சோகம் ஒழிந்தார்எவரும், செவிடர் மொழி கேட்டார்
கோபம் ஒழிந்தார் குபிதர், குருடர் விழிபெற்றார்
வேகம் ஒழிந்து, ஆறிய நம் வீரன் எழும்பொழுதே.

மோகனீயம் முதலாகிய வினைகள் அடியோடு ஒழிய, ஆன்ம குணத்தை முழுமையாக எய்திய இறைவன் ஸ்ரீவிஹாரம் சென்றபோது, ஊமைகள் பேசும் திறம் பெற்றனர்; நொண்டிகள் ஏறுபோல் நடக்கலாயினர்; அனைவரும் தத்தம் துன்பம் ஒழிந்தனர்; செவிடர்கள் கேட்கும் ஆற்றலைப் பெற்றனர்; சினம் கொண்டோர் அதை ஒழித்தனர், குருடர்கள் கண்ணொளி பெற்றனர்.

1042. பிறவியுறு பகையுடைய பணி நகுலம் முதலாம்
உறவி இறவாத உறவாய் அவண் நிலத்துக்கு
இறைவன் நிறைகாதலொடும் அங்கு எதிர்கொண்டார்
மறமலிவில் ஆழியுடை மன்னவனை வந்தே

பிறப்பால் இயல்பான பகையுடைய பாம்பு, கீரி போன்ற உயிர்கள் இறைவன்மீது பக்தியுடையவைகளாய், பகை மறந்து நட்புடன் அங்குவந்து அறவாழியையுடைய இறைவனை எதிர்கொண்டன.

1043. வெவ்வினைகள் தீர விமலன் கமலமேற்கொண்டு
இவ்வகை எழுந்தருளி வந்த இவை கண்டு ஆங்கு
அவ்வியமில் மைந்தரை அணைந்து சிலர் சொன்னார்
மௌவல் மலர் தூய, அவரும் மலரடி பணிந்தார்

1043. கொடுமை தரும் தீவினைகள் நீங்குமாறு, தேவ கமலத்தின் மீது – வ்வாறு ஸ்ரீவிஹாரம் மேற்கொண்ட அதிசயத்தை ஒரு சிலர் சென்று குற்றமற்ற தெளிந்த மனமுடைய மேரு மந்தரர்களிடம் தெரிவித்தனர். உடனே அவர்களும் காட்டு மல்லிகை மலர்களைத் தூவி, தாம் – ருந்த – டத்திலேயே உடனடியாக – றைவனை திசை நோக்கிப் பணிந்தனர்.

1044. ஏழடி எழுந்து, வந்து ஆங்கு இறைவனை இறைஞ்சி ஏத்திப்
பாழி அம் தடக்கை வேந்தர், பலகலம் அவர்க்கு நல்கி
ஏழுயர் உலகம் தன்னுள் இருள்கெட எழுந்த கோவின்
சூழ்ஒளி அனைய பாதம் தொழுது நாம் எழுக என்றார்.

அவர் – ருவரும் தங்கள் – டம்விட்டு – றங்கி, ஏழடிதூரம் நடந்து வந்து, பகவானை திசைநோக்கி வணங்கி, வாரி வழங்கும் தம் கைகளால் – ச் செய்தியைத் தெரிவித்தவர்களுக்குப் பல்வகை அணிகளைக் கொடுத்து – ந்த ஏழு உலகங்களிலும் மித்யாத்துவ – ருள் நீங்குமாறு ஸ்ரீவிகாரமாகி வந்த – றைவனுடைய கதிரவன் ஒளிபோல் பிரகாசிக்கும் திருவடிகளை நாமும் தொழுவோம் எழுக, எனத் தமது பரிவாரங்களுக்குக் கட்டளையிட்டனர்.

1045. முரன்றன சங்கம், எங்கும் முழங்கின முரசம் நின்று
துரங்கம் ஏறி, யானைமேல் மன்னர், தொடையல் ஏந்தி
நிரந்தனர் நெளிந்தது அன்று நிலமகள் முதுகு நீடும்
கரந்தன கடியவாய கருவினைக் குழாங்கள் ஆங்கே.

உடனே சங்குக்ள முழங்க, முரசுகள் ஒலிக்க, மேரு மந்தரர்கள் யானைமீது அமர, மற்ற பரிவாரங்கள் குதிரை முதலான வாகனங்களில் ஏறி ஒன்று சேர்ந்தனர். பூமாதேவியின் முதுகு நெளிந்தது. உயிர்களிடத்து நீண்ட காலமாகச் சூழ்ந்திருந்த தீவினைகள் நீங்கின.

1046. சந்தன குழம்பின் ஆர்ந்த சந்திர காந்தச்செப்பும்
குங்குமக்குழம்பு விம்மும், இரவியின் குழவிச் செப்பும்
இந்திர நீலச் செப்பும் அகில் புகைப் புகைத்த ஏந்தி
மைந்தரைச் சூழ்ந்து நின்றார் மயில் குழாம்போல வந்தே.

சந்தனக் குழம்பு நிரம்பிய சந்திரக் காந்தக் காந்தக் கிண்ணங்களையும், குங்குமக் குழம்பு நிரம்பிய சூரிய காந்தக் கிண்ணங்களையும், அகில் புகை அளிக்கின்ற – ந்திர நீலக் கிண்ணங்களையும் ஏந்திய மயில்கள் போன்ற. அழகிய பிணப்பெண்கள் அவர்களைச் சூழ்ந்தனர்.

1047. விசும்புற விரிந்து நாறும் விரைமலர் மாலை பெய்து
பசும்பொனும் மணியும் மின்னும் படலிகை பலவும் ஏந்தி
அசும்பறாக் கடாத்த வேழத்து அரசிளம் குமரர் வந்தார்
விசும்பின் மேல் வினையுற்பாதம் அருக்கர்தாம் இருவர் ஒத்தார்

விண்ணகம் எங்கும் மணம்பரப்பும் மலர்மாலை முதலியவைகளைக் கொண்ட, பொன்னாலும், மணிகளாலும் ஆகிய அழகிய தட்டுகளுடன், மதநீர் கொட்டும் யானைகளின் மத்தகங்களில் அமர்ந்துவந்த மேரு மந்தரர் என்னும் – ரு அரச குமார்களும் – ரண்டு சூரியனைப் போல் விளங்கினார்கள்.